Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

EJCTS
www.ejcts.mayas.info

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 43

# மதுரை இளங்கவின் படைப்புகளில் பெண்கள்

*முனைவர். ஜோ. பிரின்ஸ்*
*உதவிப் பேராசிரியர்,*
*அமெரிக்கன் கல்லூரி,*
*மதுரை-625002.*

## ஆய்வுச் சுருக்கம்

## ஆய்வு முன்னுரை

பண்டைக் காலத்தில் பெண்கள் பெருங்கல்வியாளர்களாக, ஆட்சியாளர்களாக எதனையும் சிறப்பாகச் செய்யும் ஆற்றல் வாய்ந்தவர்களாய் இருந்தனர். சான்றாக வெள்ளிவீதியார், ஔவையார், கோப்பெரும் பெண்டு, பாண்டிமாதேவி முதலானவர்கள் சங்க காலத்தில் போற்றுதலுக்குரியவர்களாக இருந்தனர். பெண்கள் காலப்போக்கில் தங்களது உரிமைகளை இழந்தனர். சமுதாயத்தில் நிலவிய ஆணாதிக்கப் போக்கால் பெண்கள் தாழ்நிலை அடைந்தனர். பெண்களை ஒடுக்கியே இலக்கியங்கள் படைக்கப்பட்டன. பெண்ணுடல், பெண்ணியம், பெண்மையை இழிவுபடுத்தல், வெறுத்தல் போன்ற நிலையில் பெண் பற்றியப் பதிவுகள் இலக்கியத்தில் காணப்பட்டன.

மதுரை இளங்கவின் தனது படைப்புகளில் பெண்ணின் பெருமையைப் போற்றியுள்ளார். அன்பு, கருணை, பொறுமை, தியாகம், இரக்கம்,

பொதுநலத்தொண்டு எனப் பெண்மைக்குச் சிறந்த வரையறைத் தரும் வகையில் தனது படைப்புகளில் பெண்களை மதுரை இளங்கவின் படைத்துள்ளார்.

## காலந்தோறும் பெண்கள்

இன்றைய நவீன அறிவியல் தொழில்நுட்ப யுகத்திலும் பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டு சமூகத்தில் ஆணாதிக்கப் போக்கு காணப்படுகின்றது. ஆளுமைத் திறன், அறிவுத் திறன், உடல் வளமை, முடிவெடுக்கும் திறன் என அனைத்திலும் ஆண்களை விடப் பெண்கள் தாழ்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர்.

18ஆம் நூற்றாண்டிலிருந்து பெண்ணுரிமைக் குரல் எதிரொலிக்க ஆரம்பித்து இந்தியாவில் வாழ்ந்த பண்டித இராமாபாய் (1885-1922) என்ற பெண்மணி பெண்ணடிமைத்தனத்திற்கு அணைபோடும் இந்து சமயப் பழமை வாதத்தை எதிர்த்துப் பேசினார். பெண்களின் சுதந்திரம் பற்றி அப்போதே பேசினார். 20 ஆம் நூற்றாண்டில் பெண்கள் கல்வி, வேலைவாய்ப்பு, சொத்துரிமை, போன்றவற்றிற்காகப் போராடினார்கள்.

சமுதாயத்தில் நிலவிய ஆணாதிக்கப் போக்கை எதிர்த்தும் குடும்பத்தில் பெண்கள் சுரண்டப்படுவதை எதிர்த்தும் பெண் விடுதலைப் போராட்டம் தொடர்ந்தது. இப்போராட்டம் பெண்களின் உரிமைகளைக் கடந்து வாழ்வின் அனைத்து நிலைகளிலும் பெண்களின் முழு விடுதலையை மையமாகக் கொண்டதாக இருந்தது. இதற்காகப் பெண்கள் இயக்கமாக இணைந்தனர்.

## மதுரை இளங்கவின் படைப்புகளில் பெண்கள்

மதுரை இளங்கவின் சமூகத்தில் சமத்துவ உரிமை பெற்று பெண்கள் ஆளுமையுள்ளவர்களாக மாற வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு தனது படைப்புகளில் பெண்களைப் படைத்துள்ளார்.

'பெண்கள் நாட்டின் கண்கள்' துறைதோறும் பெண்கள் என அதிகாரமிக்க அனைத்துப் பிரதான பதவிகளிலும் பெண்கள் இடம் பெற வேண்டும் என கனவு காண்கிறார்.

குடும்ப உறவுகள் மேம்படக் கல்விகற்ற பெண்கள் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்கிறார். வரதட்சணை ஒழிப்பதில், சாதி வேறுபாடு ஒழிப்பதில், அழகிப் போட்டிகளை ஒழிப்பதில், வீண் ஆடம்பரங்களை ஒழிப்பதில் எனப் பெண்கள் சாதிக்க வேண்டியது நிறை உண்டு. தனது படைப்புகளின் காட்சிப்படுத்தியிருக்கும் பெண்கள் வாயிலாகப் பதிவு செய்துள்ளார். பெண்கள்

தங்களுக்கு மட்டுமின்றிச் சமுதாயத்திற்கும் முழு விடுதலை நோக்கி உழைத்து அரும்பெரும் சாதனைப் பெண்கள் படைக்க வேண்டும் என்பதே மதுரை இளங்கவின் மையச் சிந்தனையாகும்.

## பெண்ணின் நிர்வாக மேலாண்மை

தற்காலத்தில் பெண்கள் அரசுத் துறையிலும், தனியார் துறையிலும் உயர் அதிகாரிகளாக செயலாற்றி சிறப்பாக நிர்வாகம் பண்ணுகின்றனர். பெண்கள் இடம் பெறாத துறைகளே இல்லை எனலாம். 'ஒரு பெண்ணின் மேலாண்மை' எனும் சிறுகதையில் இடம் பெறும் ஜோஸ்பின் சூழற்கேற்பச் செயல்பட்டு ஒரு பெரிய போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருகிறாள். 'மரியா' என்னும் தொழில் நிறுவனத்தின் பங்குதாரராக இருக்கும் ஜோஸ்பின் அவரது ஆலையில் தொழிலாளர்கள் சம்பள உயர்வுக்காகப் போராட்டம் நடத்துகின்றனர். போராட்டம் நடத்தும் இடத்திற்கு ஜோஸ்பின் தைரியமாகச் சென்று தனது தொழிற்சாலையின் நிதிநிலையை விளக்குகிறாள். பின்னர் லாபத்தில் ஒரு பகுதியைத் தொழிலாளர் குழந்தைகளின் உயர்கல்விக்கும், தொழிலாளர்களின் மருத்துவச் செலவுக்கும் ஒதுக்குவதாகக் கூறிப் போராட்டத்தை முடிவிற்கு கொண்டு வரும் ஆளுமை மிக்கப் பெண்ணாக வலம் வருகிறார்.

“லாபத்தில் எட்டில் ஒரு பகுதியைத் தனியா வெச்சிடறேன். அதை உங்களோட பிள்ளைங்க மேல்படிப்புக்கு, உங்களோட மருத்துவச் செலவுக்கு ஆதாரங்களோடப் பயன்படுத்திக்கலாம். அரசாங்கம் செய்றது போக, நாங்க ஒதுக்கற இந்தப்பணமும் உங்களுக்கு நல்லா உதவும் இதுதான் என்னோட முடிவு என்றாள் ஜோஸ்பின் அமைதியாக.

உண்ணாவிரதமிருந்தவர்கள் கசமுசாவென்று தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். வேகமாக எழுந்தாள் ஒருத்தி.

போதும்மா! இதுபோதும் இந்த உதவியே எங்களுக்குப் பெரிசு! இது உங்களுக்கும் எங்களுக்கும் ஏற்பட்ட சரியான சமரசம், இப்பவே போய் எங்க வீட்டுக்காரரை வேலைக்கு அனுப்பி வைக்கிறோம். ரொம்ப நன்றி தாயே! என்றாள் அவள்.”1 என்னும் கதைப்பகுதியின் மூலம் தலைமைப் பொறுப்பிற்குப் பெண் தகுதியானவள் என்பதை அறியலாம்.

## விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளும் பெண்

தற்காலத்தில் பெண்ணிற்கென்று எவ்வித விருப்பங்களும் இருக்கக்கூடாது என்பது ஆணாதிக்கச் சிந்தனையின் வெளிப்பாடாகும். பெண் என்பவள் ஆணிற்கு அடங்கி நடந்து குழந்தை பெற்றுக் கொடுப்பவளாகவும்,

சமையல் செய்பவளாகவும், குடும்பத்தைப் பார்த்துக் கொள்பவளாகவும் இந்த சமூகம் பெண்களைக் கருதுகின்றது. பெண்ணிற்கென்று தனித்த விருப்பங்கள் இருந்தாலும் அதை இந்த சமூகம் ஏற்றுக் கொள்ளாது. பெண் பொது இடத்தில் வந்து தனது கருத்தை, விருப்பத்தை எண்ணத்தைக் கூறினால் அதனை இச்சமூகம் புறக்கணித்து விடும். அடக்கம் இல்லாதவள், ஒழுக்கம் இல்லாதவள் என்று கூறும். இதனை மறுக்கும் வகையில் மதுரை இளங்கவின் 'வாழ்வே தொண்டாக' எனும் சிறுகதையில் பெண்ணிற்கென விருப்பம் இருந்தால் அதனை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். அதாவது முடிவெடுக்கும் அதிகாரம் பெண்ணிற்கும் வேண்டும் என்கிறார். இதனை 'ரோசி' எனும் பெண் பாத்திரம் மூலம் முன்வைக்கிறார். ரோசிப் பெரிய பணக்கார வீட்டில் பிறந்த பெண் ஆவாள். குடும்பத்தினர் அவளுக்குப் பெரிய இடத்தில் திருமணம் செய்து வைக்க நினைக்கின்றனர். ஆனால் ரோசியோ தனக்குத் திருமணம் வேண்டாம் எனவும் தான் கன்னியாஸ்திரியாகச் சென்று சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தைத் தெரிவிக்கிறார். ரோசியின் தாய் தெரசா முதலில் மறுக்கிறாள். ரோசியோ தனது முடிவில் பின்வாங்காது நிற்கிறாள். பின்னர் ரோசி அவள் நினைத்தபடியே கன்னியாஸ்திரியாகச் செல்கிறாள்.

"ஏய் ரோசி, உனக்கென்ன கிறுக்கா புடிச்சிருக்கு. கையிலே மாப்பிள்ளை, இருக்கும்போது கன்னியாஸ்திரியாப் போறியா என்று கோபத்தில் கத்தினார் தந்தை மரியதுரை. கன்னியாஸ்திரியாப் போறதுங்கிறது நான் இப்ப எடுத்த முடிவில்லை பத்து வருசத்துக்கு முன்னாடி தீர்மானிச்சது என்றாள் மகள்"2 என்னும் கதைப் பகுதியின் மூலம் பெண்ணிற்கு தன்விருப்பம் நிறைவேறிட சுயமாக முடிவெடுக்க சுதந்திரம் அளிக்க வேண்டுமென்பதையும் அறியலாம்.

## பணியிடப் பாலியல் சீண்டலுக்கு எதிரானப் பெண்

பணி செய்யும் இடங்களில், வெளிநாடுகளில், பெரிய அதிகாரிகள், முதலாளிகள் பெண்களைப் போகப்பெருளாகக் கருதித் தங்களது பாலியல் தேவைக்கு பயன்படுத்திக் கொள்கின்றனர். இதை எதிர்த்துப் பெண்கள் குரல் கொடுக்க வேண்டுமென்பதே மதுரை இளங்கவின் விருப்பாகும். அதற்கேற்ப 'அடிமைச் சாசனம்' எனும் சிறுகதையில் இடம் பெறும் சாந்தி என்னும் பெண்ணைப் படைத்துள்ளார். பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக, சாந்தி என்ற பெண்ணை இளங்கவின் சிறுகதையில் வலம்வரச் செய்கிறார்.

கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரியும், சாந்தியிடம் அக்கல்லூரி ஆட்சிக்குழுவின் செயலாளராக இருக்கும் ராபர்ட் தவறாக நடக்க எண்ணுகிறான். அவனது எண்ணத்தை அறிந்த சாந்தி அவனைக் கன்னத்தில் அடித்து வேலை வேண்டாம் என்று கூறி வெளியேறுகிறாள்.

"நீங்க என்ன சொல்றீங்க. ரிச்சர்ட் எனக்கு எதுவும் புரியலே என்று நிமிர்ந்தாள் சாந்தி. இது கூடவாப் புரியலே என்றபடி சாந்தியின் கையைப் பிடித்தான் ரிச்சர்ட் திடீரென்று.

சாந்தியின் இதயத்தில் ஆயிரம் சம்மட்டி கொண்டு அடிப்பது போல் இருந்தது. கண்மூடி கண் திறப்பதற்குள் பளார் என்று கண்கள் சிவக்க ரிச்சர்ட் கன்னத்தில் அறைந்து விட்டாள் சாந்தி"3 என்னும் கதைப் பகுதியின் மூலம் பெண் என்பவளுக்கு வேலைத்தளத்தில் பிரச்சனை ஏற்படும் போது அதை எதிர்த்துக் குரல் எழுப்ப வேண்டும். பெண்ணுரிமை, பெண் விடுதலை, சுதந்திரம் எனப் பேசுவதை விட பெண்ணிற்குப் பாலியல் ரீதியாக பிரச்சினை ஏற்படும்போது பின்வாங்காது துணிந்து செயல்பட வேண்டும் என்பதை அறியமுடிகின்றது.

## சாதி மறுப்புத் திருமணம் புரியும் பெண்

தந்தைப் பெரியார் சமூகத்தில் சாதி ஒழிய வேண்டுமென்றால் சாதி மறுப்புத் திருமணம் அவசியமென்கிறார். ஆதிக்க வர்க்கத்தின் அடக்குமுறைகளுக்கும், ஒடுக்குமுறைகளுக்கும் உட்பட்டு நாள்தோறும் தங்களது மானம், உயிர் முதலியவற்றை இழந்த மக்களைப் பாதுகாக்க தந்தைப் பெரியார் சாதி மறுப்பு இயக்கத்தைத் தொடங்கினார்.

பெரியாரின் சமூக சீர்;திருத்தச் சிந்தனைக்கு எடுத்துக்காட்டாக 'தாயே வழி' சிறுகதையில் 'அமலி' எனும் பெண்ணை மதுரை இளங்கவின் படைத்துள்ளார்.

'அமலி' பள்ளியில் பட்டதாரி ஆசிரியையாகப் பணிபுரிபவள். பல மாப்பிள்ளை அவளை பார்த்துவிட்டுச் செல்கின்றனர். அமலிக்கு உடன் பணிபுரியும் ஸ்டீபன் என்பவர் மீது விருப்பம் இருந்தாலும் அவளது வீட்டில் ஸ்டீபன் சாதியைக் காரணம் காட்டி மறுக்கின்றனர். அமலி பங்குத்தந்தையின் உதவியுடன் வீட்டில் சம்மதம் பெற்று ஸ்டீபனை மணம் முடிக்கிறாள்.

"ஸ்டீபனும் இவர்களோடு தான் ஆசிரியராக வேலை பார்க்கிறான். அவனுக்கு அமலியை மிகவும் பிடித்து விட்டது. ஆனால் அமலி வீட்டில் சம்மதம் கிடைக்கவில்லை.

இதற்கு சாதி மட்டும் தான் குறுக்கே நிற்கிறது. என்னோட ஒரே மகளுக்கு என் சாதி மாப்பிள்ளை தான் வேண்டும் என்று அமலியின் தாய் அடம் பிடிக்கிறாள்..........................................................................

பங்குத்தந்தை சொன்னதை அப்படியே ஏத்துக்கிட்டு ஸ்டீபனையே முடிச்சிடலாம்னு முடிவு பண்ணிவிட்டாள் என்றாள் அமலி"4 என்னும் கதைப்பகுதியின் மூலம் பெண் என்பவள் சமூகச் சீர்திருத்தத்தில் முக்கியப் பங்கு வகிப்பதையும் சாதி மறுப்புத் திருமணங்களே சாதியை ஒழிக்கும் என்பதையும் அறிய முடிகின்றது.

## குடும்ப வாழ்வில் முரண்படும் பெண்

சமுதாயத்திற்கு உயிர்நாடியாக விளங்குவது குடும்பமாகும். இந்தக் குடும்ப அமைப்பில் முக்கிய அங்கத்தினர்கள் கணவனும், மனைவியும் ஆவர். கணவனும், மனைவியும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயல்படும்போது இல்லறம் நல்லறமாகும். குடும்ப வாழ்வில் முரண் ஏற்படும் போது இருவருக்கும் சிக்கல் ஏற்படுகிறது. 'உறவில் மகிழ்ச்சி' எனும் சிறுகதையில் குடும்ப வாழ்வில் முரண்படும் 'ரூபி' எனும் பெண்ணை மதுரை இளங்கவின் காட்சிப்படுத்துகிறார்.

இச்சிறுகதையில் இடம் பெறும் ரூபி கணவன் விக்டர் தான் சொல்வதைக் கேட்காமல் அவனது அம்மா சொல்படி நடப்பதைக் கண்டு கணவனிடம் முரண்படுகிறாள். கணவனைப் பிரிந்து தோழி ரோசி அறைக்குச் செல்கிறாள். ரோசி குடும்பத்தைப் பற்றியும், உறவின் முக்கியத்துவம் பற்றியும் கூறி குடும்பத்தோடு ஒன்றுபட்டு வாழ அறிவுரை கூறுகிறாள். அவர்கள் இருவரும் உணவு விடுதிக்குச் செல்கின்றனர். அங்கு விக்டரை சந்திக்கின்றனர். ரூபி தவறை உணர்கிறாள். "ரூபி ரொம்ப வருத்தப்படுகிறாள். வீட்டை விட்டு வந்த அவளுக்கு மனசு ரொம்ப வேதனையாய் இருக்கு என்றாள் ரோசி.

அப்படியா! நானா போகச் சொன்னேன்? குடும்பம்னா என்னன்னு அவளுக்குப் புரியலே, எங்க கிராமத்திலே வீட்டுக்கு வீடு பத்துப்பேர் இருப்பாங்க. எங்க வீட்லே தாத்தா, பாட்டி, மாமா, அத்தை, சின்னம்மா இப்படி இருந்தோம். உறவு நிறைஞ்ச குடும்பம். எப்பவும் சந்தோசமாய் இருப்போம். இவளுக்கு என் அம்மா ஒருத்தரோடயே வாழ பிடிக்கலே, அது நான் என்ன செய்ய முடியும்?"5

என்னும் கதைப்பகுதியின் மூலம் உறவுகளை இழப்பது வாழ்க்கை அல்ல, உறவுகளைச் சேர்ப்பது தான் வாழ்க்கை. அதுதான் இன்பம் என ஒரு ஆண் பெண்ணிற்கு உறவின் முக்கியத்துவத்தைப் புரிய வைக்கிறான். பொதுவாக அனைத்துக் குடும்பங்களிலும் மாமியார்-மருமகள் உறவு சிக்கல் உள்ளது. அதனைப் பெரிதுபடுத்தாது குடும்பத்தில் அனுசரித்து செல்லும்போது முரண்பாடு ஏற்படாது. 'கூடிவாழ்ந்தால் கோடி நன்மை' என்பதை மதுரை இளங்கவின் குடும்ப வாழ்வில் முரண்படும் பெண்ணான ரூபி வாயிலாக காட்சிப்படுத்துகிறார்.

## தாயின் ஏக்கம்

சமூகத்தில் பெண் மகளாக, மனைவியாக, தாயாக வாழ்ந்து தெய்வமாகக் காட்சியளிக்கிறாள். ஆகவே வயதான காலத்தில் தாயை மதித்து அவரது உணர்விற்கு மதிப்பளித்து வாழவேண்டும். தாயாகத் திகழும் பெண்ணை தனிமை வாழ்வில் தவிக்க விடக்கூடாது என்னும் கருத்தை வலியுறுத்தி மதுரை இளங்கவின் 'புது வாழ்வு' சிறுகதையில் தாய் நேசம்மாளை படைத்துள்ளார்.

இச்சிறுகதையில் இடம் பெறும் நேசம்மாள் கணவர் சூசைராஜ் மறைவிற்குப் பின் தேவகோட்டையில் தங்கியிருந்தார். வெளிநாட்டிற்கு மகனும், வெளிமாநிலத்திற்கு மகளும் சென்று விடுகின்றனர். மகன், மகளைப் பார்க்காத ஏக்கத்தில் நேசம்மாளின் மனநலம் குன்றிப் போகின்றது. தாயின் நிலையை அறிந்த மகன் மாற்றலாகி சென்னைக்கு வந்து விடுகிறான்.

"ஆல்பர்ட், உங்கம்மாவுக்கு வேற ஒண்ணுமில்லே, நம்மை கவனிக்க யாருமில்லேங்கிற கவலை இருக்கு. உங்க அக்காவும் படிச்சு நல்ல வேலையிலே ஹைதராபாத்திலே குடும்பத்தோடு இருக்கா. நீயும் அமெரிக்கா போய் பத்து வருசம் ஆகுது. வருசத்துக்கு ஒரு தடைவ வந்து பார்த்துட்டுப்போறே. நாம் இப்படி தனியாக கிடக்கிறோமே என்ற கவலை தான் உங்கம்மாவை அதிகம் வாட்டுது. மத்தபடி அவங்களுக்கு எந்த நோயும் இல்லே. அப்படியா டாக்டர்! நீங்க சொல்றது புரியுது என்றான் ஆல்பர்ட்"6 என்னும் கதையின் மூலம் தாய்க்குத் தேவை அன்பும், அக்கறையானப் பராமரிப்புமே ஆகும். இல்லையென்றால் தனிமை வாழ்வு அவரை வாட்டி வதைத்து விடும். அல்லது ஏக்கத்திலே மனப்பாதிப்பு ஏற்பட்டு உயிர்போய் விடும். இந்நிலை யாருக்கும் ஏற்படக்கூடாது என்றும் தனிமை வாழ்வு துயரமான வாழ்வு என்பதை நேசம்மாள் வாயிலாக இளங்கவின் பதிவு செய்துள்ளார். கூட்டுக் குடும்ப முறை சிதைந்து தனிக்குடும்ப வாழ்வின் கோர வடிவமே இந்த முதியோர் புறக்கணிப்பு ஆகும். முன்னோர் மொழியைப் பொன்னைப் போல் போற்றுவோம் என்பது தற்காலத்தில் பொய்த்துப் போய் விட்டது. முதுமைப் பருவம் என்பது மீண்டும் தோன்றும் குழந்தைப் பருவமாகும்.

## உறவுகளை இணைக்கும் பெண்

உலகமயமாதல், நவீனமயமாதல், இயந்திரமயமாதல் ஆகியவற்றின் விளைவாகச் சமூகத்தின் முக்கியக் கூறான குடும்பம் சிதையத் தொடங்கி விட்டது. குடும்ப உறுப்பினர்களிடையேப் புரிதல் குறைந்து உறவுகளில் விரிசல் ஏற்பட்டன. தற்போதைய சூழ்நிலையில் பெரும்பாலான குடும்ப உறுப்பினர்களிடையே யார் பெரியவன்? என கருத்து வேறுபாடு ஏற்பட்டு பூசல்களும், மனக்கசப்புகளும் தோன்றுகின்றன. பொறுத்துப்போகும் தன்மை,

ஒற்றுமை, உள்ளன்பு ஆகியன தற்கால குடும்ப உறுப்பினர்களிடையே குறைந்து போய்விட்டது. இதனை மனதில் கொண்டு மதுரை இளங்கவின் 'முறியாத கிளைகள்' எனும் சிறுகதையைப் படைத்துள்ளார்.

இச்சிறுகதையில் இடம் பெறும் ராபர்ட், பெனடிக்ட் அண்ணன் தம்பியர் ஆவார். இவர்களுக்குள் பிணக்கு ஏற்பட்டபோது தாய் விக்டோரியா அவர்கள் இருவரையும் அழைத்துப் பேசி குடும்ப உறவின் ஒற்றுமையை வலியுறுத்தி முறிந்த உறவுகளை இணைக்கிறாள்.

"நீ அவனைச் சொல்றே அவன் உன்னைச் சொல்றான், இப்படி இரண்டு பேரும் போட்டிப் போட்டு நடந்தாக் குடும்பத்திலே எப்படி சமாதானம் ஏற்படும்? நீங்க இரண்டு பேரும் சமாதானமா இருந்தால்தான் நான் விழா நடத்த சம்மதிப்பேன். உறவு முறிஞ்சு போறதிலே எனக்கு ஒப்புதல் இல்லை என்று கூறிவிட்டு போனை வைத்து விட்டார் விக்டோரியா.

நான் அண்ணா வீட்டிற்கு பெங்களூர் போனேன்மா, குடும்பத்தோட போய் எல்லாம் சமாதானமாயிட்டோம். நீங்க கவலைப்படாதீங்க. எங்களுக்குள் கருத்து வேறுபாடு இல்லை எல்லாம் சரியாயிடுச்சு என்றான் பெனடிக்ட். இயேசுவுக்கு தோஸ்திரமப்பா…என்றாள் விக்டோரியா"7 என்னும் கதைப்பகுதியின் மூலம் குடும்பத்தில் உறவுகள் நிலைக்க சமாதானம் மிக அவசியமாகும். சகோதரர்களுக்குள் ஒற்றுமை இருந்தால்தான் முறியாத கிளையாக உறவுநிலைக்கும் என்பதை மதுரை இளங்கவின் சுட்டிக் காட்டுகிறார்.

## அணிகலன்களை தியாகம் செய்ய முன்வரும் பெண்

பொதுவாக ஆடை, தங்க அணிகலன்களை அனைத்துப் பெண்களும் விரும்புவர். அப்படிப்பட்ட தங்க அணிகலன் தாய் ஒருவள் திருமணமான தன் பெண்ணின் முதல் கிறிஸ்துமஸ் விழாவிற்காகத் தியாகம் செய்ய முன்வருவதை மதுரை இளங்கவின் 'இப்படியும் சிலர்' சிறுகதையில் இடம்பெறும் லூர்து என்னும் பெண் மூலமாகக் காட்சிப்படுத்துகிறார்.

இச்சிறுகதையில் சந்தியாகு, லூர்து தம்பதியினர் மகள் ரூபிக்கு தங்கள் பொருளாதாரச் சக்தியை மீறித் திருமணம் செய்து வைக்கின்றனர். மகள் ரூபி முதல் கிறிஸ்துமஸ்க்கு மைனர் செயின், மோதிரம் தன் கணவருக்குச் செய்முறை செய்ய வேண்டுமெனவும் அதுவும் கவுரவம் எனவும் எடுத்துரைக்கிறாள். இதனை லூர்து தனது கணவன் சந்தியாகுவிடம் எடுத்துரைக்க அவனோ திருமணக் கடனே இன்னும் அடைக்க முடியாமல் இருப்பதைச் சுட்டிக் காட்டுகிறான். மனைவி லூர்து தன் கழுத்தில் கிடக்கும்

செயினை மகளுக்காகத் தியாகம் செய்ய முன்வருகிறாள். அந்த நகையை விற்க இருவரும் நகைக்கடைக்குச் செல்கின்றனர். அங்கு சம்பந்தி அருள்தாசை சந்திக்கின்றனர். அவர் அவர்களது நகை விற்கும் முடிவை மாற்றி அவர்களுக்குப் புது நகை வாங்கிக் கொடுக்கின்றார்.

"எதுக்கு செயினை குடுத்திட்டு வாங்குறீங்க? என்று கேட்டாள் ரோசம்மா. ஒண்ணுமில்லீங்க. மருமகனுக்கு தலைக்கிறிஸ்துமசுக்கா என்றாள் லூர்து. சந்தியாகு வாய் திறக்கவில்லை.

என்னய்யா இது? மருமகனுக்குப் போட மாமியார் செயினைக் குடுக்கணுமா? இதெல்லாம் தேவையா? என்றார் சம்பந்தி அருள்தாஸ். அதனால் என்னங்க…நாட்டு நடப்பு என்றாள் லூர்து."[8] என்னும் கதைப்பகுதியின் மூலம் மகளுக்காகத் தனது நகையை விற்க முன்வரும் தாயின் தியாக உள்ளத்தைக் காணலாம். இன்றையக் காலத்தில் சுய கௌரவத்திற்காகவும், மாப்பிள்ளை வீட்டாரை திருப்திப்படுத்தவும் செலவு செய்ய வேண்டியுள்ளது. பெண்ணைப் பெற்ற பெற்றோர் செய்முறை செய்தே தங்களது செல்வத்தை இழக்கின்றனர். இந்நிலை மாற வேண்டுமென்பது இச்சிறுகதையின் உட்கருத்தாகும்.

## இரக்கத்தின் உருவம் பெண்

பெண் என்பவளின் தியாகத்தாலும், இரக்கச் சிந்தனையாலும் குடும்பமும், சமுதாயமும் தழைத்து வளர்கிறது. சான்றாக 'பிச்சை புகினும்' எனும் சிறுகதையில் இடம் பெறும் தாய் 'தெரசா' தன் மகனை சிறந்த பள்ளியில் படிக்க வைப்பதற்காகத் தனது நகையை விற்க முன்வருகிறாள்.

"ஏய்! நீ சும்மா இருக்கமாட்டியா? உன்கிட்ட நகை இது ஒண்ணுதான். இதையும் விற்கவா என்று பதறினார் சூசைராஜ். இந்தாங்க பிடிங்க, போயி இத வித்திட்டு வந்து பீசக் கட்டிட்டு வாங்க. நாம் பிச்சை எடுத்தாவது பிள்ளையைப் படிக்க வைப்போம் என்றாள் தெரசா உறுதியோடு"[9]. என்னும் கதைப்பகுதியின் மூலம் 'தெரசா' என்ற பெண் மகனை எப்பாடுபட்டாவதுப் படிக்க வைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உறுதியாக இருப்பதையும் தற்காலப் பள்ளிகளின் கட்டணக் கொள்கையையும் சிறுகதையாசிரியர் படம் பிடித்துக் காட்டுகிறார்.

'விதி மீறல்' எனும் சிறுகதையில் 'தெரசா' என்னும் பெண்மணி தனது மகளின் படிப்பிற்காக முதல்வர் சிஸ்டரிடம் கெஞ்சி இடம் கேட்கிறாள். அப்போது தனது கணவன் இலங்கைக் கடற்படையால் சுட்டுக்கொல்லப்பட்டதால் மகள் புஷ்பா குறைந்த மதிப்பெண் பெற்றாள் எனக் கூறி அழுகிறாள். அப்போது முதல்வராக இருக்கும் சிஸ்டர் பெலினா தன்னுடையச் சிறுவயதில் அவரது

தந்தை இலங்கைக் கடற்படையில் சுட்டுக் கொல்லப்பட்தையும், மதர் ரோசி அவளுக்கு அடைக்கலம் கொடுத்துப் படிக்க வைத்து முதல்வர் நிலைக்கு உயர்த்தியதை நினைத்துப் பார்த்து அந்தப் பெண்ணின் தாய்க்கு மனம் இரங்கி இடம் தர மனம் இறங்குகிறாள்.

"தெரசாவை உள்ளே அனுப்பி வைத்தாள் எழுத்தர் செலின் மகள் புஷ்பா வெளியே கண் கலங்கியபடி நின்றாள்.

அம்மா, இவளோட அப்பனை பரீட்சைக்கு முன்னாடித்தான் கடல்லே இலங்கை கடற்படைக்காரங்க சுட்டுக் கொன்னுட்டாங்க. அந்தக் கவலையிலே என் மகள் இடிவிழுந்தது போல் ஆயிட்டா. அப்பனைப் பறிகொடுத்த வேதனையலே இவள் எப்படியோ பர்Pட்சை எழுதி பாசாயிட்டாம்மா. எனக்கு இவள் ஒரே பிள்ளை. பாவி நான் என்ன செய்வேன்? என்றாள் தெரசா. அவள் கூறியதைக் கேட்ட சிஸ்டர் பெலினா கண்ணாடியைக் கழற்றிக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டார். கடந்தகால வாழ்க்கை நிகழ்ச்சி கண்முன்வந்தது.

செலின் இந்தப் புஷ்பாவுக்கு அட்மிசன் போட்டிரு. எல்லாத்திலேயும் அனுமதி தந்து கையெழுத்துப் போட்டுறேன். அவளுக்கு ஹாஸ்டல்லேயும் இடம் கொடுத்திரு என்றார் சிஸ்டர் பெலினா"10 என்னும் கதைப்பகுதியின் மூலம் தந்தையை இழந்த பெண்ணிற்கு உதவும் மற்றொரு பெண்ணைக் காணலாம். பெண்ணிற்கு மட்டுமே இரக்கக் குணம் உண்டு என்பதையும் அதிகாரமிக்கப் பதவிகளில் பெண்கள் அமர்ந்தாலும் மனிதநேயத்துடன் நடந்து கொள்ளுவார் என்பதையும் இதன் மூலம் அறிய முடிகின்றது.

## ஆய்வு முடிவுகள்

பெண்ணின் வாழ்க்கைப் போராட்டம் மிக்கது. பெண்ணுள்ளத்தின் சிந்தனை பரந்த நோக்குடையது. உள்ளத்து உணர்வுகளோடும், குடும்ப உறவுகளோடும் தொடர்புடையது. சமுதாயத்தின் பலதரப்பட்டப் பெண்களை மதுரை இளங்கவின் தனதுச் சிறுகதைகள் வாயிலாகச் சிறப்பாகப் பதிவு செய்துள்ளார்.

இவரதுப் படைப்புகள் பெண்ணுள்ளத்தின் வேதனைகளையும், சிக்கல்களையும் காட்சிப்படுத்துகின்றன. மதுரை இளங்கவினின் சிறுகதைகளில் இடம் பெறும் பெண்கள் மனைவியராக, அன்னையராக, கத்தோலிக்க மதத்தில் துறவியாக இணைந்து சேவை செய்யும் பெண்களாக, கிராமத்து வெள்ளந்தி பெண்களாக, அநீதியை எதிர்க்கும் பெண்களாக, இரக்கம் மற்றும் தியாகத்தின் சின்னமாக விளங்குகின்றனர்.

மதுரை, இளங்கவின் தனது படைப்புகளில் பெண்களைத் தமக்கென்று தனித்த முற்போக்குச் சிந்தனையோடு உயர்ந்த குறிக்கோளுடன் வாழ்க்கையென்னும் போராட்டக் களத்தில் போராடுபவர்களாக விளங்குகின்றனர்.

பிரச்சினைகளை எதிர்கொள்ளும் துணிவு, அடக்குமுறைகளுக்கு எதிராகப் போராடும் திறன், விழிப்புணர்வு பெறுதல், சகப் பெண்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டுதல், விருப்பத்தினை தெரிவித்தல் ஆகிய பெண்ணியச் சிந்தனைகளை மதுரை இளங்கவின் தனதுச் சிறுகதைகளை மதுரை இளங்கவின் தனது சிறுகதைகளின் மையப்பொருளாகக் கையாண்டுள்ளார்.

## அடிக்குறிப்புகள்

1. மதுரை இளங்கவின், வடுதலைக்காற்று சிறுகதைகள், ப.22.
2. மதுரை இளங்கவின், மதுரை இளங்கவின் கதைகள், ப.122.
3. மதுரை இளங்கவின், வடுதலைக்காற்று சிறுகதைகள், பக்.74-75.
4. மேலது, பக்.95-96.
5. மதுரை இளங்கவின், மதுரை இளங்கவின் கதைகள், பக்.194-195.
6. மேலது, ப.223.
7. மேலது, பக்.226-228.
8. மேலது, ப.231.
9. மேலது, ப.116.
10. மேலது, பக்.242-243.

## துணைநூற்பட்டியல்


1. 1.மதுரை இளங்கவின்,-விடுதலைக் காற்று,வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல்-01, முதல்பதிப்பு 2012.
2. 2. மதுரை இளங்கவின் - விடியல், வைரவன் பதிப்பகம், மதுரை-01, முதல்பதிப்பு 1983.
3. 3. மதுரை இளங்கவின்,-பகல் நட்சத்திரங்கள், பாத்திமா பிரிண்டர்ஸ், மதுரை-18, முதல்பதிப்பு 1988.
4. 4. மதுரை இளங்கவின்,-சப்பரம் தூக்கி, நம் வாழ்வு வெளியீடு, சென்னை-04, முதல்பதிப்பு 2008.
5. 5.மதுரை இளங்கவின்,- - விடுதலைக் காற்று, வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல்-01, முதல்பதிப்பு 2012.
6. மதுரை இளங்கவின்,- இதயவாசல் கவிதைகள், வாழ்க்கைச்சட்டம் வெளியீடு, சென்னை-93, முதல்பதிப்பு 2018.
7. 5. மதுரை இளங்கவின்,- - குயிலின் மழலை, வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல்-04, பதிப்பு ஆண்டு இல்லை.